மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை. இப்போது கிடைக்கும் சுண்ணாம்புக்கல் தரமுள்ளதாக இல்லை. அது உருக்குத் தொழிலுக்குப் பயன்படுமா என்பது ஆராயப்பட்டு வருகிறது.

திரு. ச. சங்குமுத்து தேவர்: அந்த வருமானம் ஒன்று அரசுக்குக் கிடைக்க வேண்டும் அல்லது ஊராட்சிக்குக் கிடைக்க வேண்டும். இந்த நிலங்களுக்குச் சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அதை எடுத்துச் செல்லுகிறார்கள். இந்தப் பகுதிகள் எல்லாம் இனாம் கிராமங்களாக இருக்கின்றன. புறம்போக்கு நிலத்தில் எடுப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய வருமானம் ஊராட்சிக்குக் கிடைக்க வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கல் குவாரி, சுண்ணாம்பு குவாரி, மண் குவாரி ஆகியவற்றுக்கெல்லாம் லைசென்ஸ் வாங்க வேண்டும். அதற்கான கட்டணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் வசூலிப்பார். மாண்புமிகு உறுப்பினர் கவனம் இனாம் பகுதியைப் பற்றியே இருக்கிறது. அதைப்பற்றி விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதி அனுப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்பேரிங் தொழிற்சாலை

*14 வினா—திரு. கே. சங்கனாதன்: மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில், அரசுத் துறையில், பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்டம் ஓசூர் அருகில் கூட்டுத் துறையில் பால்பேரிங் தொழிற்சாலை ஒன்று நிறுவும் திட்டம் உள்ளது.

(இ) "அசியன் பேரிங்ஸ் லிமிடெட்" என்னும் கூட்டுத் துறை நிறுவனம் ஏற்படுத்தும் இந்தத் தொழிற்சாலை ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் பலவகை பேரிங்குகள் தயாரிக்கும் திறனுள்ளதாக இருக்கும்.

1975 அக்டோபர் 23]

திரு. கே. ரங்கநாதன் : இந்தியாவிலேயே மோட்டார் பம்ப் செட்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அதிகமான அளவில் கோவை மாவட்டத்தில் இருக்கின்றன. அவற்றுக்கு முக்கியமாக 'பால் பேரிங்' தேவைப்படுகிறது. அதை உத்தேசித்து கோவை மாவட்டத்தில் அந்தத் தொழிற்சாலையை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். பின்தங்கிய மாவட்டத்தில் தொழிற்சாலையை ஆரம்பிப்பதால் அதற்கு மத்திய சர்க்கார் சப்சிடி கிடைக்கிறது. அதன் காரணமாக தருமபுரி மாவட்டம் ஹோசூரில் இந்தத் தொழிற்சாலை உருவாக்கப்பட இருக்கிறது. 'சிப்காட்' உதவியும் இதற்குக் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின் மதிப்பு 10 கோடி ரூபாய். 1977 ஆம் ஆண்டு உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நம்முடைய மாநிலத்திலே ஏற்கனவே பல சிறு சிறு தொழில்கள் அமைந்திருக்கின்றன. இன்னும் பல சிறு தொழில்களைத் துவங்க வாய்ப்புகள் இருக்கின்றன. மூலப் பொருள்கள் கிடைக்கின்றன. இது பற்றிய விவரங்கள் தெரியாததால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'பால் பேரிங்' தொழிற்சாலை பற்றிக் கேளுங்கள். பொதுவாகக் கேட்காதீர்கள். பாலிசிக்குள் போகாதீர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். நாம் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில் கருத்தரங்குகள் நடத்துகிறோம். எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன மூலப் பொருள்கள் கிடைக்கின்றன, என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற விவரங்கள் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதிலே அக்கறை கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. அந்த மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய மூலப் பொருளைக் கொண்டு தொழிலை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும். மற்றவர்களையும் தூண்ட வேண்டும்.

[1975 அக்டோபர் 23

திரு. மா. வெ. கரிவேங்கடம்: தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட இருக்கும் தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது? அது எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 500 பேருக்கு இதனுல் வேலை கிடைக்கலாம் என்ற விவரம் இருக்கிறது.

விவசாய அதிகாரிகள் குழு வருகை

*15 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் செப்டம்பர் மாத அளவில், பல நாட்டு விவசாய அதிகாரிகள் குழு தமிழகத்திற்கு வருகை தந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: ஓர் விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* 16. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a British Team had visited villages in Chingleput district on 7th October 1974 to study the Agricultural Production Programme; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: A statement ** is placed on the Table of the House.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பல நாட்டு விவசாய அதிகாரிகள் நம்முடைய விவசாயப் பகுதியைப் பார்த்துவிட்டு கருத்து ஏதேனும் தெரிவித்திருக்கிருர்களா? நம்முடைய விவசாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் வகையில் விருப்பம் தெரிவித்திருக்கிருர்களா?

---

* 225-226 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 226-228 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.